முருகப்பெருமான் துணை

**மகான் திருமாளிகைதேவர் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

01.05.2022, ஞாயிற்றுக்கிழமை

1. சற்குருநாதனே அரங்கா வாழ்க
சங்கடம் போக்கிக் காத்தருளும்
அற்புத ராஜனே ஞான தேசிகனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது தகரின் திங்கள்
குறைவிலா மூவாறு திகதி கதிர்வாரம்
(சுபகிருது வருடம் சித்திரை மாதம் 18ம் நாள், 01.05.2022 ஞாயிற்றுக்கிழமை)
தெரிவிப்பேன் அருளாசி தன்னை
திருமாளிகைதேவர் யானும் உலகநலம்பெற
3. நலம்பெற இனிதே உரைப்பேன்
ஞானிகள் பூசை செய்யும்
பலம்பெருகி மக்களிடை சக்தி
பாலதண்டாயுதன் வரமாகக் கிட்ட
4. கிட்டவே பிரணவக் குடிலின் குரு
குருவரங்கன் தொடர்பை கூட்டி
தட்டாது ஞானம் பயின்று வர
தருமபலம் கூடும்படி அன்னதானம்
5. அன்னதானம் வெகுவாகச் செய்து
அரங்கா முருகா எனும் செபம்
எண்ணமெல்லாம் கடக்கச் செய்து
இணைந்து அரங்கன் நிழலில்
6. நிழலில் வாழ்வினை தொடர
நெடி ஆயுள் ஆரோக்கியம்பட
காலனையே வெல்லும் சக்திகூடி
கந்தப் பெருமான் ஆசிபட வாழ்வர்
7. வாழ்வினில் சைவ நெறி ஏற்று
வழிமொழிந்து உலகமெலாம் பரவ
தாழ்விலா சேவைதனை தொடர
தரணியில் ஞானவான்களாகி
8. தேற்றம் மாற்றம் தேசமெங்கிலும்
தேசிகன் அவதார நோக்கமாக
ஆற்றல்பட கொண்டு செல்லும்
அழியாமை பெற்றவர்களாக மாறி
9. மாறியே கலித் துன்பங்களை
மண்ணுலகை விட்டு விரட்டும்
ஆறுதல் கொண்ட சக்திகளாகி
அரங்கன் வழி அனைவரும் ஞானிகளாவர்

10. ஆவரே உலகமக்கள் எல்லாம்
ஆற்றல் மிக்க தலைமைகளை
புவனம் எங்கிலும் தேர்ந்தெடுக்கும்
புண்ணியபலம் கூடி இனிதே

11. இனிதே ஞான ஆட்சித் தருவர்
என்றும் நிலைக்கும் ஞானிகள் ஆட்சி
கனிவேலன் தலைமை தாங்கிட
கலியுகமே ஞானயுகமாக மாறச் செய்வர்
அருளாசி முற்றே

–சுபம்–